# கூட்டுறவுக் கல்வி

**மாணவர்களின் தனிப்பட்ட கற்கும் பாணிகள் மற்றும் ஆர்வங்களை சந்திக்க உதவும் முகமாக ஸ்டுடன்ட் சக்சஸ் இனிஷியேடிவ் மூலமாக, ஒன்டாரியோ உயர்நிலைப் பள்ளிகள் விரிவக்கப்பட்ட திட்டங்களை வழங்குகின்றன. இந்தத் திட்டங்கள், பல்வேறுபட்ட புதிய மற்றும் மேம்பட்ட கல்வித் தெரிவுகள் மூலம் மாணவர்கள் தங்கள் உயர்நிலைப் பள்ளி அனுபவத்தை தமக்கேற்றவாறு வடிவமைக்க அனுமதிக்கிறது. இந்தத் தெரிவுகள் இரட்டைத் கிரெடிட்டுகள், ஸ்பெஷலிஸ்ட் ஹை ஸ்கில்ஸ் மேஜர் மற்றும் கூட்டுறவுக் கல்வி ஆகியவற்றை உள்ளடக்கும்.**

**இத் திட்டங்கள் அனைத்து மாணவர்களின் தேவைகள், ஆர்வங்கள் மற்றும் திறமைகளை சந்திக்க உதவுவதோடு கல்வியில் மாணவர்களை ஈடுபடுத்தி பட்டம்பெறவும் அதற்கும் அப்பாற்பட்ட காலத்திற்கும் அவர்களை தயார்செய்கிறது.**

## கூட்டுறவுக் கல்வி என்றால் என்ன (கோ-ஒப்)?

- மாணவர்கள் வேலைப் பயிற்சி ஏற்பாட்டை (வேர்க் ப்ளேஸ்மன்ட்) பூர்த்தி செய்வதோடு உயர்நிலைப் பள்ளி கிரெடிட்களையும் பெற்றுக்கொள்ள உதவும் அமைச்சுவினால் அங்கீகரிக்கப்பட்ட திட்டமே கூட்டுறவுத் திட்டமாகும். கூட்டுறவுக் கல்வி ஆசிரியரால் மேற்பார்வைசெய்யப்படும் கூட்டுறவுப் பாடம், தொடர்புடைய தலைப்பில் ஒரு கல்வித்திட்டம் மற்றும் வேலைப் பயிற்சி ஏற்பாடு ஆகியவற்றை இத்திட்டம் கொண்டிருக்கும்.
- மேல்நிலைப் பள்ளிப் படிப்பை நிறைவு செய்வதற்கான கட்டாயத் தேவைகளுக்காக, மாணவர்கள் இரண்டு கோ-ஒப் கிரெடிட்களைப் பயன்படுத்தலாம்; தெரிவுசெய்யக்கூடிய கோ-ஒப் கிரெடிட்களைப் பெற்றுக் கொள்வதற்கு வரையறையே கிடையாது. கூட்டுறவு அமர்த்துதலை (கோ-ஒப் ப்ளேஸ்மன்ட்ஸ்) மாணவர்களின் மேல்நிலைப் பள்ளி ஏற்பாடுசெய்யும். கல்வி அமைச்சின் கொள்கைகள் மற்றும் வழிமுறைகள் கட்டாயமாக பின்பற்றப்படவேண்டும்.

## இத்திட்டம் யாருக்காக?

- தொழில் பழகுவதற்கு, கல்லூரிக்கு, பல்கலைக்கழகத்திற்கு அல்லது வேலைத்தலத்துக்குச் செல்லப்போகும் உயர்நிலை மாணவர்களுக்காகவே கூட்டுறவுத் திட்டங்கள் இருக்கின்றன.

## கூட்டுறவுத் திட்டங்களின் முக்கிய பலன்கள்

கோ-ஒப் மாணவர்கள் பெறக்கூடிய வாய்ப்புகள்:

- அனுபவக் கல்வி
- வேலைத் தெரிவுகளை “டெஸ்ட் ட்ரைவ்” அதாவது செய்துபார்த்தல்
- வகுப்பறைப் படிப்பின் தொடர்பைக் காணுதல்
- வேலைத்தல அனுபவத்தின் மூலம் கிரெடிட்களைப் பெறுதல்
- வேலைத்தலத்தில் தேவைப்படும் முக்கிய திறமைகளையும் பழக்கங்களையும் வளர்த்தல்
- மேற்படிப்புத் திட்டங்களுக்கும் எதிர்கால வேலைக்கும் தேவையான தற்குறிப்புப் படிவத்தில் (ரெசூமி) சேர்க்கக்கூடிய அருமையான வேலை அனுபவத்தைப் பெறுதல்.

## கூட்டுறவுத் திட்டங்கள் எங்கே வழங்கப்படுகின்றன? நான் எவ்வாறு மேலும் தெரிந்துகொள்ளலாம்?

- ஒன்டாரியோவின் அனைத்து பாடசாலை சபைகளும் கோ-ஒப் திட்டங்களை வழங்குகின்றன. மேலதிக தகவலுக்கு உங்கள் பள்ளித் தலைமை ஆசிரியர் அல்லது பாடசாலை சபையில் ஸ்டுடன்ட் சக்சஸ் லீடரை அணுகுங்கள். கூட்டுறவு கல்விபற்றிய அதிக விபரமான தகவல்களை **www.ontario.ca/studentsuccess** இல் காணலாம்.

ontario.ca/EDUparents

ISBN 978-1-4606-1228-6 (PDF) (Tamil) © ஒன்டாரியோவுக்கான குவீன்ஸ் ப்ரின்டர், 2013

Ontario